# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
*******

**ஆணை எண்: 012/பேரூ/2023**
**நாள் : 11.02.2023**

திரு. T. லாரன்ஸ் கிருபாகரன்,
வள்ளியூர், திருநெல்வேலி மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
வடக்கு வள்ளியூர் சிறப்புநிலை பேரூராட்சி,
திருநெல்வேலி மாவட்டம் – எதிர் மனுதாரர்

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர், இராதாபுரம் தாலுகா, சண்முகபுரம், வடக்குத் தெரு எண்.23Y என்ற முகவரியைச் சேர்ந்த திரு. T. லாரன்ஸ் கிருபாகரன் என்பவரது நாளிடப்படாத மனு இம்முறைமன்ற நடுவத்தில் 21.12.2022 அன்று பெறப்பட்டு 012/பேரூ/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூர், இராதாபுரம் தாலுகா, சண்முகபுரம், வடக்கு தெரு, எண்.23Y என்ற முகவரியைச் சேர்ந்த திரு. T. லாரன்ஸ் கிருபாகரன் என்பவர் தனது மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

நான் வடக்கு வள்ளியூர் சிறப்புநிலை பேரூராட்சியில் 1-வது வார்டு உறுப்பினராக இருந்து வருகிறேன். செயல் அலுவலர் மற்றும் அலுவலகத்தில் உள்ள பணியாளர்கள் சேர்ந்து நடைபெற்ற வேலைக்கு PWD, TWAD Board நிர்ணயம் செய்த விலைக்கு 5 மடங்கு அதிகமாக பில் போட்டு வசூல் செய்கின்றனர் செயல் அலுவலர் மற்றும் அலுவலகத்தில் உள்ள பணியாளர்கள் சேர்ந்து பஞ்சாயத்து பணத்தை சட்ட விரோதமாக அவர்கள் சேவைக்கு நிதியிழப்பு செய்து வருகிறார்கள் PWD. TWAD Board-படி எந்த வேலைக்கு எவ்வளவு விலை போட வேண்டும் என்ற விவரம் தெரிந்தும் வள்ளியூர் பஞ்சாயத்து செயல் அலுவலர் மற்றும் பணியாளர்கள் அவர்கள் விருப்பப்படிவிலையை அதிகமாக பில் போட்டு பஞ்சாயத்து பணத்தை சட்ட விரோதமாக நிதியிழப்பு செய்து வருகிறார்கள். மேற்படி விவரங்கள் நான் இந்த புகார் மனுவுடன் தாக்கல் செய்து

அனுப்பியுள்ள பஞ்சாயத்து வரவு செலவுக் கணக்குகளைப் பார்த்தாலே தெளிவாக தெரிய வரும். வடக்கு வள்ளியூர் சிறப்பு நிலை பேரூராட்சியில் செயல் அலுவலராக திருமதி. சுஷ்மா இருந்து வருகிறார். தலைமை எழுத்தாளராக செல்வி கார்த்திகா இருந்து வருகிறார். இவர்கள் இருவரும் கூட்டு சேர்ந்து வடக்கு வள்ளியூர் பேரூராட்சியில் அரசு நிதிக்கு பல்வேறு நிதியிழப்புகளை ஏற்படுத்தி வருகிறார்கள். இதில் வடக்கு வள்ளியூர் சிறப்பு நிலை பேரூராட்சி மன்றத்தின் சாதாரணக் கூட்டம் 28.10.2022 வெள்ளிக்கிழமை அன்று காலை 11.00 மணி அளவில் இப்பேரூராட்சி மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது.

இதில் செப்டம்பர் மாத செலவுச் சீட்டு கணக்கில் நடந்த நிதி இழப்பு பின்வருமாறு:–

| No. | Date | Bill Rate | Actual |
|---|---|---|---|
| 768 | 01.09.2022 | 8,900 | 4,500 |
| 769 | 01.09.2022 | 8,800 | 3,300 |
| 770 | 01.09.2022 | 8,800 | 2,000 |
| 771 | 01.09.2022 | 8,900 | 1,500 |
| 772 | 01.09.2022 | 8,900 | 2,400 |
| 728 | 02.09.2022 | 8,800 | 3,100 |
| 779 | 02.09.2022 | 8,900 | 1,800 |
| 780 | 02.09.2022 | 8,600 | 1,500 |
| 781 | 02.09.2022 | 8,900 | 2,900 |
| 782 | 02.09.2022 | 9,000 | 2,100 |
| 787 | 05.09.2022 | 9,600 | 1,500 |
| 789 | 05.09.2022 | 8,900 | 2,000 |
| 805 | 06.09.2022 | 8,800 | 2,800 |
| 806 | 06.09.2022 | 9,000 | 2,000 |
| 807 | 06.09.2022 | 8,900 | 4,100 |
| 808 | 06.09.2022 | 8,800 | 2,800 |
| 818 | 07.09.2022 | 8,800 | 4,400 |
| 819 | 07.09.2022 | 8,900 | 1,700 |
| 820 | 07.09.2022 | 9,000 | 3,300 |
| 821 | 07.09.2022 | 8,900 | 1,800 |
| 827 | 08.09.2022 | 9,000 | 3,500 |
| 828 | 08.09.2022 | 8,800 | 3,000 |
| 829 | 08.09.2022 | 8,900 | 2,100 |
| 830 | 08.09.2022 | 8,800 | 3,100 |
| 831 | 08.09.2022 | 8,900 | 1,800 |
| 833 | 09.09.2022 | 9,000 | 1,800 |
| 834 | 09.09.2022 | 8,900 | 2,300 |
| 835 | 09.09.2022 | 8,900 | 2,400 |
| 836 | 09.09.2022 | 8,900 | 2,300 |
| 837 | 09.09.2022 | 8,500 | 1,450 |
| 840 | 12.09.2022 | 9,000 | 3,300 |

| | | | |
|---|---|---|---|
| 841 | 12.09.2022 | 8,900 | 2,100 |
| 842 | 12.09.2022 | 8,900 | 1,500 |
| 843 | 12.09.2022 | 8,500 | 1,500 |
| 844 | 12.09.2022 | 8,900 | 2,000 |
| 847 | 13.09.2022 | 8,800 | 2,100 |
| 848 | 13.09.2022 | 8,900 | 3,000 |
| 849 | 13.09.2022 | 9,000 | 2,000 |
| 850 | 13.09.2022 | 8,800 | 1,800 |
| 851 | 13.09.2022 | 8,800 | 2,100 |
| 863 | 15.09.2022 | 9,000 | 2,100 |
| 864 | 15.09.2022 | 8,900 | 2,200 |
| 865 | 15.09.2022 | 9,000 | 1,550 |
| 866 | 15.09.2022 | 8,500 | 2,000 |
| 870 | 16.09.2022 | 8,900 | 2,000 |
| 871 | 16.09.2022 | 8,700 | 2,500 |
| 872 | 16.09.2022 | 8,900 | 2,500 |
| 873 | 16.09.2022 | 8,900 | 3,300 |
| 874 | 16.09.2022 | 9,000 | 2,000 |
| 901 | 19.09.2022 | 8,900 | 2,800 |
| 902 | 19.09.2022 | 8,800 | 1,800 |
| 903 | 19.09.2022 | 9,000 | 4,100 |
| 904 | 19.09.2022 | 9,000 | 3,100 |
| 905 | 19.09.2022 | 8,700 | 2,800 |
| 908 | 20.09.2022 | 8,900 | 1,800 |
| 909 | 20.09.2022 | 9,000 | 2,100 |
| 910 | 20.09.2022 | 8,900 | 2,000 |
| 911 | 20.09.2022 | 9,000 | 2100 |
| 912 | 20.09.2022 | 8,900 | 2,900 |
| 916 | 21.09.2022 | 8,800 | 4,000 |
| 917 | 21.09.2022 | 8,700 | 2,200 |
| 918 | 21.09.2022 | 8,900 | 2,900 |
| 919 | 21.09.2022 | 9,000 | 2,000 |
| 920 | 21.09.2022 | 8,900 | 1,200 |
| 926 | 27.09.2022 | 8,900 | 1,200 |
| 927 | 21.09.2022 | 8,800 | 4,500 |
| 928 | 27.09.2022 | 9,600 | 2,100 |
| 929 | 27.09.2022 | 9,600 | 4,100 |
| 930 | 27.09.2022 | 8,900 | 2,200 |
| 935 | 28.09.2022 | 8,300 | 3,100 |
| 936 | 28.09.2022 | 9,000 | 2,000 |
| 937 | 28.09.2022 | 8,900 | 1,500 |
| 938 | 28.09.2022 | 9,000 | 2,100 |
| 940 | 29.09.2022 | 8,900 | 2,200 |
| 941 | 29.09.2022 | 8,800 | 2,800 |
| 942 | 29.09.2022 | 8,900 | 3,100 |

| | | | |
|---|---|---|---|
| 943 | 29.09.2022 | 9,000 | 2,100 |
| 944 | 29.09.2022 | 8,900 | 2,200 |
| 959 | 30.09.2022 | 8,900 | 2,100 |
| 960 | 30.09.2022 | 9,000 | 2,200 |

மேற்கண்ட செயல்பாடுகளைப்போல் செயல் அலுவலர் திருமதி. சுஷ்மா பணிபுரியும் காலகட்டத்தில் பல்வேறு நிதி இழப்புகளை வடக்கு வள்ளியூர் சிறப்பு நிலை பேரூராட்சிக்கு ஏற்படுத்தி வருகிறார். இவர் மீதும், இவருக்கு உறுதுணையாக இருந்து வரும் செல்வி.கார்த்திகா மற்றும் பணியாளர்கள் மீதும், ஊழல் தடுப்பு சட்டப்படி நடவடிக்கை எடுக்கக் கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்துள்ளார்.

முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்பக்கோரி வடக்கு வள்ளியூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலருக்கு கடிதம் அனுப்பப்பட்டது. அவர் தனது 24.01.2023 நாளிட்ட கடிதத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

“மனுதாரரின் புகார் மனுவில் திருநெல்வேலி மாவட்டம் வடக்கு வள்ளியூர் சிறப்புநிலை பேரூராட்சியின் செயல் அலுவலர் மற்றும் அலுவலக பணியாளரும் சேர்ந்து பேரூராட்சியில் நடைபெறும் வேலைகளுக்கு அவர்கள் விருப்பப்படி பொது பணித்துறை மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய விலைக்கு 5 மடங்கு கூடுதலாக பில்போட்டு எடுத்ததாக தெரிவித்துள்ளார். மேலும், பேரூராட்சி செயல் அலுவலர் திருமதி. டி. ஆர். சுஷமா மற்றும் தலைமை எழுத்தராக உள்ள செல்வி. கார்த்திகாவும் பேரூராட்சிக்கு நிதி இழப்பு ஏற்படுத்தி உள்ளதாக தெரிவித்துள்ளார். இப்பேரூராட்சியில் தலைமை எழுத்தர் பணியிடம் ஏதும் இல்லை. செல்வி. கார்த்திகா என்பவர் இளநிலை உதவியாளரே ஆவார். முறையீட்டாளர் தனது முறையீட்டு மனுவில் 28.10.2022 அன்று நடைப்பெற்ற பேரூராட்சி மன்ற கூட்டத்தில் வைக்கப்பட்ட சில செலவினங்களுக்கான செலவுச்சீட்டுகளின் விபரத்தினை குறிப்பிட்டுள்ளார். முறையீட்டாளரின் புகார் மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள செலவினங்கள் அனைத்தும் குடிநீர் திட்ட பிரிவில் உள்ள பைப்லைன் உடைப்பு சரிசெய்தல், கசிவுகள் அடைப்பு சரிசெய்தல் மற்றும் பொது நல்லிகள் பராமரிப்பு போன்ற அன்றாடம் ஏற்படும் சாதாரண செலவினங்கள் ஆகும்.

மேலும் தனது மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ள செலவின பட்டியலை Bill Rate தொகை மற்றும் (Actual) என்பதையும் பட்டியலிட்டுள்ளார்.

குடிநீர் திட்ட பழுது நீக்க பணிகளுக்கு வருடாந்திர அடிப்படையில் அவ்வபோது ஏற்படும் பழுதுநீக்க பணிகளுக்கு வழங்கப்பட வேண்டிய தொகை குறித்து இப்பேரூராட்சி மன்றத்தின் 19.04.2022ம் தேதிய சாதாரண கூட்டத்தில் பொருள் எண்.5 ஆக வைக்கப்பட்டு தீர்மானம் எண்.19ன்படி அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதன்படி குடிநீர் திட்டப்பிரிவில் ஏற்படும் பழுதுகளின் தன்மை, குழாயின் அளவு, குழிதோண்ட வேண்டிய நீளம் முதலிய அனைத்து விபரங்களும் இடம் பெற்றுள்ளது. எனவே, இச்செலவினங்கள் அனைத்தும் பழுதின் தன்மை, குழி தோண்டப்பட வேண்டிய நீளம், குடிநீர் குழாயின் தன்மை மற்றும் அளவு ஆகியவற்றின் அடிப்படையில் நேரடியாக கள ஆய்வு செய்து வேலைக்கு தகுந்தவாறு தொகை வழங்கப்பட்டுள்ளது.

இப்பேரூராட்சியில் 20 இன்ச் விட்டமுடைய 9 கி.மீ. தூரமுள்ள பிரதான குழாய் (Pumping Main) மூலமாகவும் 35.05. கி.மீ. நீளமுடைய ஏசி மற்றும் பிவிசி பகிர்மான குழாய் மூலமாகவும், 3700 எண்ணிக்கையிலான வீட்டு குடிநீர் இணைப்புகளும், 244 இதர வகை குடிநீர் இணைப்புகளும் மற்றும் 633 எண்ணிக்கையிலான பொது குடிநீர் குழாய் இணைப்புகள் மூலமாகவும் பொது மக்களுக்கு சீரான குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேலும், 44 எண்ணிக்கையிலான ஆழ்குழாய் கிணறுகள் அமைத்து குழாய்கள் பதிக்கப்பட்டு விசைபம்புகள் மூலம் சின்டெக்ஸ் தொட்டிகளில் நிரப்பப்பட்டு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. எனவே, குடிநீர் திட்டப்பிரிவில் நீர் அழுத்தம், வேர் அடைப்பு, பாசி படிதல், துருப்பிடித்தல், இற்று போகுதல், பழமை, உப்பு படிவு, கனரக வாகன போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் அவ்வப்போது பழுதுகள் ஏற்படுவதும், அவைகளை உடனுக்குடன் சரிசெய்ய வேண்டியதும் இயல்பானதும், இன்றியமையாததும் ஆகும். முறையீட்டாளரால் எதன் அடிப்படையில் (Actual) என தெரிவித்துள்ளார் என்பது புலப்படவில்லை. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மற்றும் பொதுப்பணித்துறையால் அங்கீகரிக்கப்பட்ட தரப்படுத்தப்பட்ட விலையானது பெரிய அளவிலான குடிநீர் குழாய் விஸ்தரிப்பு பணிகளுக்கு அதை சார்ந்த பராமரிப்பு செலவுகளுக்கு மட்டுமே பொருத்தமுடையது ஆகும். அவ்வப்போது ஏற்படும் குடிநீர் திட்ட பழுது நீக்க பணிகளுக்கு அவ்விலையின்படி தொகை அனுமதிக்கப்பட இயலாது. ஏனெனில், பழுதுநீக்க பணிகளுக்கு என அவ்வப்போது மதிப்பீடு தயார் செய்து காலதாமதத்தை தவிர்க்கும் விதமான வருடாந்திர ஒப்பந்தப்புள்ளியின் அடிப்படையில் தொகை வழங்கப்பட்டுள்ளது. முறையீட்டாளரது புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் அனைத்தும் நேரில் பார்வையிடப்பட்டு உடனுக்குடன் புகைப்படங்கள் மூலம் ஆவணபடுத்தப்படுகிறது. புகார்தாரர்கள் மனுவில் குறிப்பிட்டுள்ள அனைத்து அசல் செலவுச்சீட்டுகளும் மாண்பமை முறைமன்றத்திற்கு பணிந்து காண்பிக்கப்படுகிறது. மேலும், அவைகளின் நகல்களும் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

முறையீட்டு மனுதாரரான திரு. தா. லாரன்ஸ் கிருபாகரன் 1–வது வார்டு உறுப்பினர் என்ற நிலையில் 19.04.2022 அன்று நடைபெற்ற கூட்டத்திலோ அல்லது 28.10.2022 அன்று நடைபெற்ற சாதாரண கூட்டத்திலோ இப்பொருள் குறித்து தனது ஆட்சேபணையினை தெரிவித்து விளக்கம் கோரியிருந்தால் அதற்கான விளக்கம் உடன் அளிக்கப்பட்டிருக்கும். அதனை தவிர்த்து தனிப்பட்ட உள்நோக்கத்துடன் பொய்யான விபரங்களை முறையீட்டு மனுவாக அளித்திருப்பது வேதனை அளிக்கிறது. எனவே, மேற்காண் விளக்கத்தினை ஏற்றுக் கொள்ளுமாறு பணிந்து வேண்டுகிறேன்'' என தெரிவித்துள்ளார்.

2. முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 31.01.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 20.01.2023 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

3. மனுதாரர் திரு. தா. லாரன்ஸ் கிருபாகரன் என்பவர் 31.01.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணைக்கு ஆஜராகவில்லை.

4. 31.01.2023 அன்று, வடக்கு வள்ளியூர் சிறப்புநிலைப் பேரூராட்சியின் செயல் அலுவலர் இம்முறை மன்றத்தின் நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"திருநெல்வேலி மாவட்டம் வள்ளியூர் பேரூராட்சியில் குடிநீர் திட்ட பழுது நீக்கப் பணிகளுக்கு வருடாந்திர அடிப்படையில் அவ்வப்போது ஏற்படும் பழுதுநீக்க பணிகளுக்கு வழங்கப்படவேண்டிய தொகை குறித்து பேரூராட்சியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேலும் பேரூராட்சியில் நடைபெறும் வேலைகளுக்கு பொதுப்பணித்துறை மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் Scheduled of Rate படி (SoR) பில் தொகை வழங்கப்பட்டு வருகின்றன என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மேற்கண்ட பணிகள் குறித்த விவரங்களை அளவீட்டுப் புத்தகத்தில் பேரூராட்சியால் பதிவுகள் மேற்கொள்ளப்படுவதில்லை என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மனுதாரர் வார்டு உறுப்பினர் என்ற நிலையில் பேரூராட்சி மன்றக் கூட்டத்திலோ அல்லது மன்ற சாதாரண கூட்டத்திலோ இப்பொருள் குறித்து ஏதும் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பாக இம்முறை மன்றத்தில் என்னால் வழங்கப்படும் 24.1.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக பதிவு செய்துகொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

5. முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் வள்ளியூர் சிறப்புநிலை பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

பரிசீலனைக்குப்பின் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது:–

திருநெல்வேலி மாவட்டம், வள்ளியூரை சார்ந்த மனுதாரர் திரு. T. லாரன்ஸ் கிருபாகரன் என்பவர் தனது முறையீட்டு மனுவில், வடக்கு வள்ளியூர் சிறப்புநிலை பேரூராட்சியில் 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் நடைபெற்ற குடிநீர் திட்ட பிரிவிலுள்ள பைப்லைன் உடைப்புகளை சரி செய்தல் மற்றும் பொது நல்லிகள் பராமரிப்பு செய்தல் போன்ற பணிகளை மேற்கொண்டதற்கு பொதுப்பணித்துறை மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நிர்ணயித்த விலையை விட 5 மடங்கு அளவிற்கு கூடுதலாக பட்டியல் (Bill) ஒப்பளிப்பு செய்துள்ளதன் மூலம் பேரூராட்சிக்கு நிதியிழப்பு ஏற்பட்டுள்ளது என்றும், இதற்கு காரணமான வடக்கு வள்ளியூர் பேரூராட்சியின் செயல் அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட பணியாளர்கள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இம்முறைமன்ற நடுவத்தை வேண்டியுள்ளார்.

வடக்கு வள்ளியூர் பேரூராட்சியில் 2022–23 ஆம் ஆண்டு குடிநீர் திட்ட பராமரிப்பு வேலைகள், மோட்டார் பழுது, அடிபம்பு பழுது மற்றும் பைப் – லைன் வேலைகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு குறைவான ஒப்பந்தப்புள்ளிகளை அங்கீகரிக்க பேரூராட்சியில் 19.04.2022 அன்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மனுதாரர் புகாராக தெரிவித்துள்ள பேரூராட்சியின் செப்டம்பர் 2022 ஆம் ஆண்டு மாத செலவுகள் பேரூராட்சியில் 28.10.2022 அன்று நடைபெற்ற கூட்டத்தில் பார்வையிடப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

பேரூராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் திட்டப்பிரிவில் ஏற்படும் பழுதுகளின் தன்மை, குடிநீர் குழாயின் தன்மை மற்றும் அளவு குழிதோண்டப்படவேண்டிய நீளம் ஆகியவற்றின் அடிப்படையில் நேரடியாக களஆய்வு செய்து வேலைக்கு தகுந்தவாறு தொகை பேரூராட்சியால் வழங்கப்பட்டு வருகிறது என்பது ஆவணங்களின் மூலம் அறிய முடிகிறது.

பேரூராட்சியின் செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் பேரூராட்சியால் மேற்கொள்ளப்படும் குடிநீர் திட்ட பழுது நீக்கப்பணிகள் குறித்த விவரங்களை அளவீட்டுப் புத்தகத்தில் (Measurement Book) பேரூராட்சியால் பதிவுகள் மேற்கொள்ளப்படுவதில்லை என தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் பணி மதிப்பீடு செய்தல், ஒப்பந்தப்புள்ளி கோருதல், மேற்பார்வையிடுதல் போன்ற பணிகளுக்கு தொழில்நுட்ப பணியாளர்களுக்கு பயன்படும் வகையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறையால் அரசாணை (நிலை) எண். 35 நாள் 10.03.2000–ல் வெளியிடப்பட்ட பொறியியற் கையேட்டில் அத்தியாயம் – IV–ல் அளவீட்டுப் புத்தகத்தை கையாளப்பட வேண்டும் என கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**CHAPTER – IV**

**<u>Measurement of Works and Measurement Book</u>**

4.1 :- All work done shall be measured then and there and payment shall be made atleast once in a month.

In case of small works, however the execution of which runs over only a few weeks, it will be more convenient to measure up and pay for the work once and for all on its completion, and the agreement with the contractors shall provide for this wherever necessary.

எனவே, அனைத்து பேரூராட்சிகளிலும், (Measurement Book) பொறியியற் கையேட்டில் வரையறுக்கப்பட்டுள்ளபடி, மதிப்பீடு தயாரித்து அளவீட்டு புத்தகம் முறையாக பதிவுகள் மேற்கொள்ளுதல், கோப்புகளில் பொறியாளரின் ஒப்புதலுடன் பட்டியல் தொகை வெளியிடுதல், போன்ற நடைமுறைகள் மூலம் கோப்புகள் முறையாக கையாள வேண்டும் என அறிவுறுத்தி அனைத்து பேரூராட்சிகளுக்கும் சுற்றறிக்கை அனுப்புமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

மனுதாரர், வடக்கு வள்ளியூர் பேரூராட்சியில் உறுப்பினராக இருக்கும் நிலையில், இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்திடும் புகாரினை பேரூராட்சியின் கூட்டத்திலேயே தெரிவித்து உரிய விளக்கம் பெற்றிருக்கலாம். மனுதாரர் தனது புகாரினை நிரூபிக்கும் வகையில் உரிய ஆவணங்களை சமர்ப்பிக்கப்படவில்லை, மேலும் இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெற்ற நேரடி விசாரணையிலும் கலந்து கொள்ளாமல் தனது புகாரினை நிரூபிக்க தவறியுள்ளார்.

இருப்பினும், வடக்கு வள்ளியூர் தேர்வுநிலை பேரூராட்சியில் 2022–23 ஆம் ஆண்டு குடிநீர் திட்ட பராமரிப்பு வேலைகள் தொடர்பான சிறு பணிகளை மேற்கொண்டதற்கு பேரூராட்சியால்

பொதுப்பணித்துறை மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் நிர்ணயித்த Scheduled of Rate படி ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளதா என்பது குறித்து உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை மூலம் தணிக்கை செய்து 3 மாத காலத்திற்குள் அறிக்கையினை பேரூராட்சிகளின் இயக்குநருக்கு அனுப்பி வைக்குமாறு உள்ளாட்சி நிதித்தணிக்கைத் துறை இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

2023–ஆம் ஆண்டு, பிப்ரவரி 11–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. தா. லாரன்ஸ் கிருபாகரன்,
23Y, வடக்குத் தெரு,
சண்முகபுரம், இராதாபுரம் தாலுக்கா,
வள்ளியூர் - 627 117.

2) செயல் அலுவலர்
வடக்கு வள்ளியூர் பேரூராட்சி,
திருநெல்வேலி மாவட்டம்.

3) இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை,
571, அண்ணாசாலை, நந்தனம்,
சென்னை 600 035.

4) பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
நகர்நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி. நகர், சென்னை–28.

5) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம்,
நகர் நிர்வாக அலுவலகம், ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 28.

நகல்
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.
இ.கோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032